பூமியின் ராஜாவே உம்மை
என்றென்றும் நான் பாடுவேன்
இந்த உலகத்தின் தேவனே
என்னை தேடி வந்த இயேசுவே

அல்லேலுயா துதி உமக்கே
என்றும் அல்லேலுயா துதி உமக்கே
அல்லேலுயா ஆமேன்

1. எல்-ஷடாய் என்றும்மை அழைப்பேன்
என் தேவையைச் சந்திக்கும் வல்லவர் நீர்
நல்லவர் நீர் உயர்ந்தவர் நீர்
நீரே என் கர்த்தரே

2. மேசையா என்றும்மை அழைப்பேன்
உம் அன்பாலே இரட்சிப்பு தந்தவரே
பரிசுத்தரே படைத்தவரே நீரே என் இரட்சகர்